**செய்தி வெளியீடு எண்:126** **நாள்: 27.02.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (27.2.2013) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு காவேரி நீர்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்பு சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.எஸ். ரங்கநாதன் அவர்கள் தலைமையில் காவேரி டெல்டா விவசாயிகள் சங்க நிர்வாகிகள் சந்தித்து, காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, தமிழகத்திற்கான காவேரி நீரினை உச்சநீதிமன்றம் மூலம் பெற்றுத் தந்தமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.எஸ்.ரெங்கநாதன்,துணைத் தலைவர்கள் திரு.வி.ராஜாராம், திரு.டி.எஸ்.கோபால்தாஸ், திரு.வி.கண்ணன், இணைச் செயலாளர் திரு.பி.காந்தி பித்தன், பொருளாளர் திரு.எம்.பாலகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் திரு.ஜெ.வரதராஜன், திரு.டி.பி.எஸ்.விக்ரமன், திரு.பாலு தீட்சிதர், தமிழக விவசாயிகள் சங்க (எஸ்.ஏ.சின்னசாமி பிரிவு), திருவாரூர் மாவட்ட தலைவர் திரு.பயரி எஸ்.கிருஷ்ணமணி, மாவட்ட செயலாளர் திரு.ஆர்.மோகன்தாஸ் மற்றும் காவிரி டெல்டா விவசாயிகள் குழுமத்தின் திருவாரூர் மாவட்டத் தலைவர் திரு.கே.குஞ்சிதபாதம் மற்றும் மாவட்ட பொது செயலாளர் திரு.வெ.சத்தியநாராயணன் மற்றும் தமிழக விவசாயிகள் சங்கம் (எம்.ஆர்.சிவசாமி பிரிவு) மாவட்ட பொறுப்பாளர் திரு.செம்மங்குடி எம்.ராஜேந்திரன்ஆகியோர் உடனிருந்தனர்.

அப்போது, தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காவேரிக்காக போராடி, காவிரியில் தமிழகத்தின் உரிமையை சட்டப்படி நிலைநாட்டி பெற்றுத் தந்தமைக்கு தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் சார்பில் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் பதிய வைத்து தமிழ் மக்களின் கண்ணீரை துடைத்துள்ளதற்கு தமிழக விவசாயிகளின் சார்பில் பாராட்டி நன்றித் தெரிவிக்க விரும்புவதாகவும் அதற்கான விழா ஒன்றினை நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும் அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அதை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.3.2013 அன்று தஞ்சாவூரில் இந்த நன்றி விழாவினை நடத்திட அனுமதி அளித்தார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்:- 27.2.2013.